# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.09.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

***(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** *இவ்வாசகம், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது எவரேனும் ஆளினால் தவறொன்று புரியப்பட்ட நேரத்தில் பதினெட்டு வயதிற்குட்பட்ட அத்தகைய ஆளுக்கெதிராக மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலாகாது அல்லது பதியப்படுதலாகாது என்பதனைக் குறிப்பிடுவதற்கும் அத்துடன் அவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பளிப்பதற்குப் பதிலாக அவரைத் தடுத்துவைத்தல் நிறுவனம் ஒன்றில் தடுத்துவைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்குமாகும்.*

ச. வ.- ஓ. 12/2021

## (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*19 ஆம் அத்தியாயத்தின் 53 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்*

**2.** (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன், அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

"பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஆட்களுக்கு மரண தண்டகைக்கு பதிலாக தடுத்து வைத்தல் தண்டனை

53. (1) எவரேனும் ஆளினால் தவறொன்று புரியப்பட்ட நேரத்தில், பதினெட்டு வயதிற்குட்பட்ட அத்தகைய ஆளுக்கெதிராக மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலோ அல்லது பதியப்படுதலோ ஆகாது.

(2) நீதிமன்றமானது, அத்தகைய ஆளிற்கு மரணதண்டனைத் தீர்ப்பளிப்பதற்குப் பதிலாக, தண்டனைத் தீர்ப்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்காகவும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு அமையவும், பதினெட்டு வயதிற்குட்பட்ட ஆட்களைத் தடுத்துவைப்பதற்காக அத்தகைய எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தடுத்துவைக்கப்படுவதற்கு அவருக்குத் தண்டனைத் தீர்ப்பளித்தல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.